2011 செப்டம்பர் 5]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. அரசு என்ன செய்தது என்று நான் விளக்கமாகப் பதில் அளித்தேன். தகுந்த தொழில் முனைவோர்கள் வந்தால் அம்மா அவர்களின் அரசைப் பொறுத்தவரையில் எல்லா வசதிகளும் செய்து கொடுக்கத் தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

82—

பேருந்து வசதி

***52—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறிச்சி நகராட்சி, மாச்சம்பாளையத்திலிருந்து அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளி, மாச்சம்பாளையம் பிரிவிலிருந்து சுமார் 0.8 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. மாச்சம்பாளையம் பிரிவிலிருந்து அரசு உயர்நிலைப் பள்ளிவரை செல்லும் 0.8 கி.மீ. நீளமுள்ள இச்சாலை பேருந்து இயக்கிட உகந்ததாக இல்லை. இது 12–டி கான்கிரீட் சாலையாக, மிகவும் குறுகலாகவும், எதிரே வரும் வாகனங்களுக்கு வழிவிட இயலாத அளவிலும் அமைந்துள்ளது. மேலும் மாச்சம்பாளையம் பிரிவு வழியாக 3 அரசுப் பேருந்துகள் தினசரி 24 நடைகளும், ஒரு தனியார் பேருந்து தினசரி 24 நடைகளும் இயங்கி வருகின்றன. தற்போது இப்பேருந்துகளின்மூலம் மாணவ, மாணவியர் பயன் பெற்று வருகின்றனர். இச்சாலை அகலப்படுத்தப்பட்டு, பேருந்து செல்வதற்கு ஏதுவாக அமைக்கப்பட்ட பின் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று பேருந்து இயக்கிட ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.*

திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளியானது பொள்ளாச்சி–கோவை சாலையிலே இருந்தது. 2000–2001 ஆம் ஆண்டிலே புதிதாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு இந்தப் பள்ளி மாற்றப்பட்டது. 2002–2003 ஆம் ஆண்டிலே மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. முக்கிய சாலையிலிருந்து 1½ கி.மீ. தூரம் இந்தப் பள்ளிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பள்ளியிலே மாணவ, மாணவிகளினுடைய எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், 544 பேர் படிக்கிறார்கள். மேலும் அந்தப் பகுதியிலே 3,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். இந்தச் சாலை, அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, ஏற்கெனவே பழுதடைந்திருந்தது. அந்தச் சாலை தற்போது சரி செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அந்தப் பகுதிக்கு 80, 84 என்ற தடம் எண் கொண்ட இரண்டு பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தன. அதனால் இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு, அந்தச் சாலை தற்போது சரி செய்யப்பட்டு விட்டதால், மீண்டும் பரிசீலனை செய்து அந்தப் பகுதிக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலை தேவையான அளவிற்கு அகலப்படுத்தப்பட்டு, அந்தப் பள்ளிக்கூடத்திற்கு பேருந்து வசதி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.*

திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அந்தப் பகுதி மக்கள் சார்பாகவும், அந்தப் பள்ளி மாணவ, மாணவிகளின் சார்பாகவும், என்னுடைய*

2011 செப்டம்பர் 5]

சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தோ.பெ. பூனாட்சி அவர்கள்.

திரு. தோ.பெ. பூனாட்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருவரங்கம் ரங்கநாதரை வணங்கி, திருவரங்கம் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு, திருவரங்கம் தொகுதி மற்றும் திருச்சி மாவட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்த பெருமையை அளித்திட்ட எங்கள் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சி மாவட்ட மக்களின் சார்பாக உங்கள் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10—50

இருந்த இடத்தில் இருந்தே உலகில் நடக்கும் அத்தனை நிகழ்வுகளையும் காணவும், அறியவும் ஆற்றல் பெற்ற எங்கள் தாயே, புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்போல, இருக்கும் இடத்திலிருந்து அறிந்தும், தெரிந்தும் காப்பாற்றும் ஆயிரம் கண்ணுடையாள் அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் ஆலயம் உள்ள பகுதியான மணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிமட்டத் தொண்டன் என்ற ஒரே ஒரு தகுதியோடு, புரட்சித் தலைவிதான் எனது தெய்வம் என்று வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில், முசிறி எம்.ஜி.ஆர். இளைஞர் அணி ஒன்றியப் பொருளாளர், மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர், முசிறி ஒன்றியக் கழகச் செயலாளர், 1996 முதல் 2006 வரை இரண்டு முறை ஒன்றியக் கவுன்சிலர் போன்ற பதவிகளை எனக்குக் கொடுத்தீர்கள் அம்மா! கடந்த 2006 ஆம் ஆண்டு முசிறி சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக மிகப் பெரிய வாய்ப்பினைக் கொடுத்து, குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பினை இழந்தாலும்கூட, மீண்டும் இந்த ஏழைத் தொண்டன்மீது கருணைப் பார்வை பார்த்து, 2011—ல் வேட்பாளராக அறிவித்து, ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகழால் மணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெறச் செய்த தாயே! எனது மனமார்ந்த நன்றியினை நானும், எனது குடும்பமும்

(மேசையைத் தட்டும் ஒலி) எனது வாரிசுகளும் தலைமுறை தலைமுறையாக தங்கள் காலடியில் வைத்து நன்றியோடு இருப்போம் தாயே!

அதேபோல, இந்த மாமன்றத்தின் வாயிலாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்து தமிழகத்தைக் காக்க வேண்டுமென்ற உணர்வோடு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்தவர்களுக்கும் மணச்சநல்லூர் தொகுதியின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன், அம்மா.

எனது மணச்சநல்லூர் தொகுதியில் வியாபாரிகள் அதிகமாக உள்ளதால் மணச்சநல்லூரிலிருந்து சென்னைக்கு குளிர்சாதன வசதியுடன் கூடிய பேருந்து இயக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, நேற்று மட்டும் விழுப்புரத்திலிருந்து 237 பேருந்துகள், சிறப்புப் பேருந்துகளாக இயக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, கும்பகோணத்திலிருந்து 276 சிறப்புப் பேருந்துகளும், சேலம் கோட்டத்திலிருந்து 141 சிறப்புப் பேருந்துகள் இப்படி ஒட்டுமொத்தமாக சுமார் 1,500–க்கும் மேற்பட்ட சிறப்புப் பேருந்துகள் (மேசையைத் தட்டும் ஒலி) 4 நாட்கள் விடுமுறை தினம் என்பதால் மாணவர்கள், பணிக்குச் செல்வோர்கள், பொதுமக்கள் வசதி கருதி மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, இந்தச் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டன.

அதேபோல, பேருந்து வசதி எங்கெல்லாம் தேவையோ அதை ஆய்வு செய்து உடனடியாக பொதுமக்கள் நலன் கருதி, பேருந்துகளை இயக்க மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மணச்சநல்லூரிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று அரசு

2011 செப்டம்பர் 5]

உரிய நடவடிக்கை எடுத்து பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இரண்டாவது முறையாக பணியாற்றுவதற்கு வாய்ப்பளித்திருக்கின்ற எங்களது தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும், எங்களது பொருளாளர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும், எனக்கு இந்த வெற்றியை அளித்திருக்கின்ற குன்னம் தொகுதி சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய குன்னம் தொகுதியானது கிராமங்கள் அதிகம் நிறைந்த தொகுதி. இன்றைக்கு சென்னையிலே பணிபுரிகின்ற தொழிலாளர்களில் பெரும்பான்மையானவர்கள் எங்களுடைய குன்னம் தொகுதியையும், அதேபோன்று அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களையும் சேர்ந்தவர்களாக இருக்கின்றார்கள். எனவே, அங்கேயிருக்கின்ற மக்கள் பணிபுரிவதற்காக சென்னைக்கு அதிகமாக வரவேண்டியிருக்கிறது. எனவே, அந்தப் பகுதியிலிருந்து தொழிலாளர் மக்கள் வருவதற்காக, எங்களுடைய பகுதியிலிருந்து வயலப்பாடியிலிருந்து குன்னம், பெரம்பலூர் வழியாக சென்னைக்கு ஒரு பேருந்து இயக்குவதற்கு அமைச்சர் முன்வருவாரா என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியில் பயணிகளுடைய அடர்வு அதிகமாக இருக்கும்பட்சத்தில் ஆய்வு செய்து, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய ஆணையினைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.